செ.வெ.எண்: 544/2016 நாள்: 18.08.2016

**பத்திரிகைச் செய்தி**

**தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்குவதற்காக பயனாளிகளை தேர்வு செய்வதற்கான சிறப்பு கிராம சபைக் கூட்டம்**
**மாவட்ட ஆட்சியர் தகவல்**

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கிராம ஊராட்சி பகுதியிலுள்ள ஏழை மக்களில் பரம ஏழை பெண்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் தமிழக அரசின் முன்னோடி திட்டத்திற்காக 2016-2017-ம் நிதியாண்டில் நவம்பர் மாதத்தில் வழங்குவதற்காக திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அயக்கோடு மற்றும் பாலமோர் ஊராட்சி மற்றும் தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செண்பகராமன்புதுார் ஆகிய கிராம ஊராட்சியிலிருந்து **269** பயனாளிகளை தேர்வு செய்வதற்கான சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கிராம ஊராட்சியை சார்ந்த பொது மக்கள் இத்திட்டம் தொடர்பாக தெரிந்து கொள்ளும் பொருட்டும், இத்திட்டத்தில் பயனாளிகளாக பங்குபெற்று பயன்பெற தேவையான தகுதிகள் குறித்தும் மற்றும் இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று பரிசீலனை செய்வது குறித்தான சிறப்பு கிராமசபைக்கூட்டம் **22.08.2016** அன்று காலை 11.00 மணிக்கு சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது.

| **வ. எண்** | **சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ள கிராம ஊராட்சியின் பெயர்** | **தேர்வு செய்யப்பட வேண்டிய பயனாளி களின் எண்ணிக்கை** | **திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கவும் விண்ணப்பங்கள் பெறுவதற்குமான கிராமசபைக் கூட்ட தேதி** | **பயனாளிகளிகள் பட்டியலை இறுதி செய்வதற்கான கிராமசபைக் கூட்ட தேதி** |
|---|---|---|---|---|
| 1. | அயக்கோடு | 143 | 22.08.2016 | 29.08.2016 |
| 2. | பாலமோர் | 20 | 22.08.2016 | 29.08.2016 |
| 3. | செண்பகராமன்புதுர்ர் | 106 | 22.08.2016 | 29.08.2016 |
| | **மொத்தம்** | **269** | | |

கிராம அளவிலான குழு மூலம் தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்ட பின்னர் தகுதியான பயனாளிகளின் பட்டியல் மேற்படி கிராம ஊராட்சிகளில் **29.08.2016** தேதியில் முற்பகல் 11.00 மணிக்கு இரண்டாம் கட்டமாக நடைபெறும் சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் வைத்து தீர்மானிக்கப்படவுள்ளது. எனவே அயக்கோடு, பாலமோர் மற்றும் செண்பகராமன்புதுார் கிராம ஊராட்சி பகுதியினை சார்ந்த பொதுமக்கள் மேற்படி சிறப்பு கிராமசபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு பயன் பெற்றிட மாவட்ட ஆட்சியர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.